# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.19 /2026

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/ Pw2 |
| Name | : Selvam |
| Father/Husband's Name | : Ramanjal |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.03.2026.

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் செங்கல்பட்டு மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக இருந்து 31.05.2025ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். நான் கடந்த 27.10.2023 அன்று மதியம் 12.00 மணியளவில் செங்கல்பட்டு மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, எனக்கு கிடைத்த ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், நான் மற்றும் என்னுடன் சுரேஷ்குமார் தலைமை காவலர் 212, தங்கராஜ் காவலர் 231 ஆகியோர்களுடன் வேதநாராயணபுரம் அருகே மதியம் 1 மணியளவில் ரோந்து பணியிலிருந்தபோது, அருகிருந்த ரகசிய தகவலாளி அடையாளம் காட்ட, ஆஜர் எதிரியை விசாரித்தபோது, அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால், அவரை சோதனை செய்ய போவதாக சொல்லி மேற்படி, எதிரியிடம் நான் உன்ஊன சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், அவரை சோதனை செய்த போது, அவர் பாக்கெட்டில் 5 கிராம் கஞ்சா வீதம் 20 பாக்கெட்கள் மொத்தமாக 100 கிராம் கஞ்சா வைத்திருந்தார். பொது மக்கள் சாட்சிகள் யாரும் அங்கு இல்லாததால், அதை நான்

மேற்சொன்ன சுரேஷ்குமார் மற்றும் தங்கராஜ் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அதன் பிறகு எதிரியை கைது செய்து, கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரியுடன் நிலையம் சேர்ந்து, எதிரி மீது நிலைய குற்ற எண்.500/2023 8(c),20(b) (ii)(A) NDPS act ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரியை உரிய பாராவசம் ஒப்படைத்து, இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அந்த படிவம் 91 **அதசா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 100 கிராம் கஞ்சா **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து, மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் மதியம் 12 மணியளவில் ரகசிய தகவல் கிடைத்தது. நான் எனது இருசக்கர வாகனத்தில் சம்பவ இடம் சென்றேன். என்னுடன் வந்த இரு காவலர்கள் எந்த வாகனத்தில் வந்தார் என்பது பற்றி எனக்கு தெரியாது. காவல்நிலையத்திலிருந்து சம்பவ இடம் 15-20 கி.மீ தூரம் இருக்கும். நான் அரைமணி நேரத்தில் சம்பவ இடம் சென்றோம். அவ்வாறு ரகசிய தகவல் கிடைத்தால், பொது நாட்குறிப்பில் குறிப்பு வைத்து விட்டு, மேல் அதிகாரிக்கு தகவல் தெரிவித்துவிட்டு சம்பவ இடம் சென்றோம். அவர் வாய்மொழியாக எனக்கு உத்தரவு கொடுத்துவிட்டார். 1.45 மணியளவில் சம்பவத்திலிருந்து காவல்நிலையம் சென்றோம். சம்பவ இடத்திற்கு 12.15 மணியளவில் கிளம்பினோம். நான் சம்பவ இடம் சென்றவுடன் 15 நிமிடத்தில் 12.45 மணிக்கு காவலர்கள் வந்துவிட்டார்கள். சம்பவ இடம் பொது மக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். அங்கு குடியிருப்பு இருக்கும். நான் தட்டச்சு செய்த கைப்பற்றுதல் மகசரில் காவலர்களிடம் கையொப்பம் பெற்றேன். நான் தான் அருகில் இருக்கும் computer center க்கு சென்று, தட்டச்சு செய்து வந்தேன். சம்பவ இடத்திலிருந்து computer center அரை கி.மீ தூரத்தில் இருக்கும். நான் 10 நிமிடத்தில் சென்றுவிட்டேன். எதிரி சம்பவ இடத்தில் காவலர்கள் பாதுகாப்பில் இருந்தார்கள். நான் 2.30 மணியளவில் காவல்நிலையம் சென்ற போது, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். கைப்பற்றுதல் மகசர் தயார் செய்த பின்பு தான் ,முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். கைப்பற்றுதல் மகசரில் கு.எண். மற்றும் பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொருளை கைப்பற்றும் போது பொது

மக்களை சாட்சியாக அழைத்தபோது அவர்கள் முன் வரவில்லை. அவ்வாறு பொது மக்களை சாட்சியாக சேர்க்க நாங்கள் முயற்சி செய்தோம். 28.10.2023ம் தேதி முதல் தகவல் அறிக்கையும், கைப்பற்றப்பட்ட பொருளையும் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலமும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகசர், சாட்சிகளின் வாக்குமூலமும் 05.11.2025 ம்தேதி கிடைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கஞ்சாவை Police Storage ல் வைத்து அதற்கான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் அவ்வாறு ரசீது கொடுக்கவில்லை. கைப்பற்றப்பட்ட பொருளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போது புகைப்படமோ, வீடியோவோ எடுக்கவில்லை. எதிரியின் மீது வேறு வழக்குகள் இல்லாததால், மறுநாளே இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிட்டேன். தேதி ஞாபகமில்லை. 2-3 நாட்கள் கழித்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டேன். வழக்கு சொத்தை தடவியியல் துறைக்கு அனுப்பவில்லை. 05.11.2025 ம் தேதி தான் இறுதி அறிக்கை நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றது. கால தாமதத்திற்கான காரணத்தை நீதிமன்றத்தில் மனுவாக தாக்கல் செய்யவில்லை. சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவிலலை என்றாலும், வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்றாலும், பொது மக்களை சாட்சியாக சேர்க்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றாலும், சட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் வழக்கிற்கு தேவையான அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

sd/- S. Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu